செ.கு. எண் :- 261 நாள் :- 24.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 24.7.2012

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், சிந்தப்பள்ளி கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் 23.7.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில், சாத்தூர் வட்டம், வெங்கடாசலபுரத்தைச் சேர்ந்த திரு. படேல் முகமது என்பவரின் மகன் திரு. ஹக்கீம் சேட் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 24.7.2012 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த திரு. ஹக்கீம் சேட் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திரு. ஹக்கீம் சேட்டின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.